**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.18/2025** **நாள் :19.03.2025**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு நுகர்வோர்கள் செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை 2025 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு நுகர்வோர்கள் செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை 2025 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறது.

சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்களில் காசோலை (Cheque) மற்றும் வரைவோலை (Demand Draft) மூலமாக செலுத்தலாம்.

மேலும், நுகர்வோர்கள் https://bnc.chennaimetrowater.in/#/public/cus–login என்ற வலைதளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இ–சேவை மையங்கள், UPI, வசூல் மையங்களில் உள்ள QR குறியீடு மற்றும் iPoS போன்ற பிற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம். நுகர்வோர்கள் இவ்வசதியினைப் பயன்படுத்தி மேல்வரியினை தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்கிறது.

...2...

எனவே, நுகர்வோர்கள் 31.03.2025 க்குள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னைக் குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in